**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.267/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.3.கோபாலகிருஷ்ணன்** |
| **Father's Name** | : **கந்தசாமி** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.03.2020

மு.வி:

நான் போடிநாயக்கனூரில் வசித்து வருகிறேன். நான் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய சித்தப்பா மகன். எதிரிகளை எனக்கு தெரியும். 2013 ஆம் வருடம் சிவாரத்திரி தினத்திற்கு முதல் நாள் வீரசின்னன் என்ற எத்துலாவு அம்மாள் சித்தைய சாமி என்ற கோவிலுக்கு சென்றிருந்தோம். சிவராத்திரி அன்று காலை 10.30 மணி அளவில் வாழைமரங்களை கட்டிக்கொண்டிருந்தோம். அப்போது ஆணைமலைப்பட்டியை சேர்ந்தவர்கள் டிராவல்ஸ் பஸ்சில் கோவிலுக்கு வந்தார்கள். அவர்களில் 1 மற்றும் 2 எதிரிகள் மற்றும் 4 பேர் யாரை கேட்டுடா கோவிலில் வேலை செய்கிறீர்கள் என சத்தம் போட்டு கம்பி மற்றும் கம்பியால் என்னை அடித்தார்கள். எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. சொல்ல முடியாத வார்த்தைகளால் அசிங்கமாக பேசினார்கள். நான் மயக்கமாகி விழுந்துவிட்டேன். 1, 2 எதிரிகள் மற்றும் அவர்களுடன் வந்தவர்கள் அ.சா.1யும் அடித்து காயப்படுத்தினார்கள். அ.சா.1க்கு கண்ணிற்கு அருகில் காயம் ஏற்பட்டது. பிறகு என்னையும் அவரையும் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது ஜெகதீசன் உடன் வந்தார். நான் மயக்கமாக இருந்ததால் அன்று மாலை போலீசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு நினைவு திரும்பிய பிறகு என் கழுத்தில் இருந்த 5 ½ பவுன் தங்க செயின் காணாமல் போயிருந்தது.

கு.வி:

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.267/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.4.ஜெகதீஸ்வரன்** |
| **Father's Name** | : **சோலைசெட்டியார்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.03.2020

மு.வி:

நான் போடிநாயக்கனூரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1, 2, 3 ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். மார்ச் மாதம் 2013 ஆம் வருடம் மாசிப்பச்சை திருவிழா நடைபெற்றது. எழுமலை ஆத்தங்கரைபட்டி வீரசின்னன் என்ற எத்துலாவு அம்மாள் சித்தைய சாமி கோவிலில் காலை 6 மணிக்கு வாழை மரம் கட்டினோம். அப்போது சில முக்கிய பிரமுகர்கள் வராத காரணத்தினால் காலை 10 மணிக்கு வாழைமரம் கட்டுமாறு அங்கிருந்த மக்கள் சொன்னார்கள். 10.30 மணிக்கு வரவேண்டியவர்கள் வந்துவிட்டார்கள். அனைவரும் வாழைமரம் நட்டுக்கொண்டிருந்தார்கள். அ.சா.2 அய்யோ என்று கத்தி தலையில் காயம்பட்டு கீழே விழுந்துவிட்டார். யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை. நான் அ.சா.2யை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தேன். போலீசார் மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். வேறு யாருக்கும் காயமானதா என்று நான் கவனிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

இல்லை.